Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பாதிப்பு, மணி:55 ஓசை:202 உள்ளூர்:22.07.2026 புதன் விலை:4.00 பக்கங்கள்:04 Website: http://maduraimaninews.com

Madurai Edition Vol:55 Issue:202 வெளியூர்:23.07.2026 வியாழன் Price : 4.00 Page: 04 Email: maduraimaninews@gmail.com

**கடனை அடைக்க மலேசியா சென்றவர் உயிரிழப்புசாவில் மர்மம் இருப்பதாக குற்றச்சாட்டு**

**போதை ஒழிப்பு உறுதிமொழி இலச்சினை வெளியிட்டார் காவல் ஆணையர்**

**கர்நாடகாவில் அமைச்சரவை விரைவில் விரிவாக்கம் டி.கே.சிவகுமார்**

**ஜாலியன் வாலாபாக் தாக்குதல் சிஜேபி போராட்டக்காரர்கள் குற்றச்சாட்டு**

# டிரம்ப் அதிரடி

## இந்திய மருந்துகளுக்கு 200% வரை வரி



**புதுடெல்லி.ஜூலை.22**

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஜெனரிக் மருந்துகளுக்கு புதிய இறக்குமதி வரி திட்டத்தை அறிவித்துள்ளார். முதல் 2 ஆண்டுகள் வரி இல்லை. அதன் பிறகு 100%, பின்னர் 200% வரை வரி உயர்த்தப்படும் என தெரிவித்துள்ளார். இந்தியா அமெரிக்காவுக்கு அதிகளவில் ஜெனரிக் மருந்துகளை ஏற்றுமதி செய்வதால், இந்த திட்டம் அமலுக்கு வந்தால் சன் ஃபார்மா, டாக்டர் ரெட்டீஸ், சிப்ளா, லூபின் உள்ளிட்ட இந்திய நிறுவனங்கள் கடும் பாதிப்பை சந்திக்கக்கூடும். இதனால் அமெரிக்காவில் உற்பத்தி ஆலைகளை அமைக்க வேண்டிய கட்டாயமும் உருவாகலாம்.

# இணையம் இல்லாமலும்

## யு.பி.ஐ பணப் பரிவர்த்தனை அருக்களத் தொடர்பு தொழில்நுட்பம்

## தேசிய பணப் பரிவர்த்தனைக் கழகம்



**புதுடெல்லி.ஜூலை.22**

இந்தியாவில் டிஜிட்டல் பரிவர்த்தனையை மேலும் எளிதாக்கும் வகையில், தேசிய கட்டண கழகமான NPCI புதிய முயற்சியை மேற்கொண்டுள்ளது. இனி இணைய வசதி இல்லாத இடங்களிலும் NFC (Near Field Communication) தொழில்நுட்பத்தின் மூலம் ஹிறிமி ஆஃப்லைன் பணப் பரிவர்த்தனை செய்யும் வசதி விரைவில் அறிமுகமாக உள்ளது. இதற்காக முன்னணி நிறுவனங்களின் PoS (Point of Sale) இயந்திரங்களுக்கு NPCI அனுமதி வழங்க உள்ளது. இந்த சேவை செயல்பாட்டுக்கு வந்தால், விமானப் பயணம், மெட்ரோ ரயில் நிலையங்கள், தொலைதூர கிராமங்கள், மலைப்பகுதிகள் மற்றும் இணைய இணைப்பு இல்லாத இடங்களிலும் UPI மூலம் எளிதாக பணம் செலுத்த முடியும். இந்த புதிய முறையில், மொபைலில் உள்ள NFC வசதியை பயன்படுத்தி 2,000 வரை இணையம் இல்லாமலேயே பணம் செலுத்தலாம். இருப்பினும், இதைப் பயன்படுத்த முன்கூட்டியே UPI Lite Wallet-ல் பணம் ஏற்றியிருக்க வேண்டும். இந்த வசதியால் குறைந்த மதிப்பிலான பரிவர்த்தனைகள் வேகமாக நடை பெறுவதோடு, மோசடி மற்றும் நிதி திருட்டு அபாயமும் கட்டுப்படுத்தப்படும் என NPCI தெரிவித்துள்ளது. இதற்காக PoS சேவை வழங்கும் நிறுவனங்கள் புதிய மென் பொருளை உருவாக்க உள்ளன. ஏற்கனவே 2023ல் ஆஃப்லைன் UPI சேவையும், 2024ல் NFC வழி நபர் நபர் ஆஃப்லைன் பரிவர்த்தனையும் அறிமுகமான நிலையில், தற்போது வணிகர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக் கிடையேயான PoS ஆஃப்லைன் UPI பரிவர்த்தனையை அறிமுகப் படுத்தும் நடவடிக்கையில் NPCI ஈடுபட்டுள்ளது. இந்த சேவை அறிமுகமானால், இந்தியாவின் டிஜிட்டல் கட்டண சூழல் மேலும் விரிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு புதிய நடைமுறைகள்



**சென்னை.ஜூலை.22:**

விபி ஜி ராம் ஜி திட்டத்தின் கீழ் மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்க புதிய நடைமுறைகளை தமிழக அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியர் களுக்கு மாற்றுத் திறனாளிகள் நலத்துறை ஆணையர் அமுதவல்லி சுற்றறிக்கை அனுப்பியுள்ளார். அதன்படி, தகுதியான அனைவருக்கும் 15 நாட்களுக்குள் வேலை அட்டை வழங்க வேண்டும். பணித் தளங்களில் மாற்றுத் திறனாளிகளின் திறனுக்கு ஏற்ப பணிகள் ஒதுக்கப்பட வேண்டும். குழுவாக பணியாற்றுபவர்களுக்கு சாதாரண தொழிலாளர்களின் பணியில் 50 சதவீதம் மட்டுமே ஒதுக்கப்பட்டு, தினமும் 4 மணி நேரம் பணிபுரிந்தாலே முழு ஊதியம் வழங்கப்பட வேண்டும்.மேலும், மாற்றுத் திறனாளிகளுக்காக தனி மின்னணு வருகைப் பதிவேடு பராமரிக்கவும், பணி அளவீடு மற்றும் ஊதிய வழங்கலை அதிகாரிகள் உறுதி செய்யவும் உத்தரவிடப் பட்டுள்ளது. அவர்களின் குறைகளை தீர்க்க மாதந்தோறும் வட்டார அளவிலும், இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை மாவட்ட அளவிலும் குறைகேட்பு முகாம்கள் நடத்தப்பட வேண்டும் என்றும், புதிய நடைமுறைகள் முழுமையாக செயல் படுத்தப்பட வேண்டும் என்றும் அரசு அறிவுறுத்தியுள்ளது.

# கருப்பு உடையில் எதிர்க்கட்சிகள் பச்சை துண்டில் திமுக

**புதுடெல்லி.ஜூலை.22**

பிரதமர் இல்லம் அருகே நடைபெற்ற போராட்டத்தில் ராகுல் காந்தி உள்ளிட்ட எதிர்க்கட்சி தலைவர்கள் கைது செய்யப்பட்டதை கண்டித்து, காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ், சமாஜ்வாதி கட்சி உள்ளிட்ட எதிர்க் கட்சிகளின் எம்.பி.க்கள் நாடாளு மன்றத்திற்கு கருப்பு உடையில் வந்து "கருப்பு நாள்" போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆனால், திமுக எம்.பி.க்கள் கருப்பு உடை அணியவில்லை. அதற்கு பதிலாக, கர்நாடகாவின் மேகதாது அணைத் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், விவசாயிகளுக்கு ஆதரவாக பச்சை துண்டு (Green Towel) அணிந்து நாடாளு மன்றத்தில் பங்கேற்றனர். திமுக சார்பில் மாநில நலன் தொடர்பான மேகதாது விவகாரத்தையே முன்னிலைப் படுத்தி கவன ஈர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது. இதனால், எதிர்க்கட்சிகள் ஒன்றாக மத்திய அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்தாலும், காங்கிரஸ் கூட்டணி கருப்பு உடை போராட்டத்தைத் தேர்வு செய்த நிலையில், திமுக தமிழ்நாட்டின் மேகதாது பிரச்சினையை முன்னிறுத்தி தனித்துவமான அடையாளப் போராட்டத்தில் ஈடுபட்டது.

# ராகுல் காந்தி கைதுக்கு தவெக கண்டனம்





**சென்னை.ஜூலை.22**

“அறவழியில் போராடிய இளைஞர் களுக்கு ஆதரவாகக் களமிறங்கிய ராகுல் காந்தியை டெல்லி காவல்துறை குண்டுக்கட்டாகத் தூக்கிச் சென்று கைது செய்தது ஜனநாயக உரிமைகள் மீதான தாக்குதல்” என்று தமிழக வெற்றிக் கழகம் தனது கண்டனத்தை பதிவு செய்துள்ளது. நீட் வினாத்தாள் கசிவுக்கு பொறுப்பேற்று மத்திய அமைச்சர் பதவி விலக வலியுறுத்தி, ஜூலை 20 நாடளுமன்றத்தை முற்றுகையிட கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர் பேரணியாகச் சென்றனர். அவர்கள் மீது போலீஸார் தடியடி நடத்தியதுடன், கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும் கூட்டத்தை கலைத்தனர். இதற்கிடையில், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்களுக்கு ஆதரவாக மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் ராகுல் காந்தி தலைமையில் காங்கிரஸ் கட்சியினர் நேற்று ராஜாஜி மார்க் பகுதியில் இருந்து பிரதமர் இல்லம் அமைந்துள்ள லோக் கல்யாண் மார்க் நோக்கி பேரணியாகச் சென்றனர். இதில் காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, பிரியங்கா காந்தி, கே.சி.வேணுகோபால், பவன் கேரா உள்ளிட்ட மூத்த தலைவர்கள், கேரள முதல்வர் வி.டி.சதீசன் மற்றும் கட்சி எம்.பி.க்கள் ஆகியோர் பங்கேற்றனர். பின்னர் பிரதமர் இல்லம் வெளியில் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட ராகுல் காந்தியை மத்திய அமைச்சர்கள் ஜிதேந்திர சிங், பியூஷ் கோயல் ஆகியோர் சந்தித்து போராட்டத்தை முடித்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டனர். இருப்பினும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்ட ராகுல், பிரியங்கா உள்ளிட்ட காங்கிரஸ் கட்சியினரைப் போலீஸார் குண்டுகட்டாக தூக்கிச்சென்று பேருந்துகளில் ஏற்றிச் சென்றனர். அப்போது ராகுல் காந்தியின் மூக்கில் இருந்து ரத்தம் வழிந்தது. தகவலறிந்து மந்திர் மார்க் போலீஸ் நிலையத்துக்கு சோனியா காந்தி விரைந்து சென்றார். இந்நிலையில், ராகுல் காந்தியின் கைது நடவடிக்கையை தமிழக வெற்றிக் கழகம் வண்மையாக கண்டித்துள்ளது. இதுகுறித்து அக்கட்சி சார்பில் வெளியிட்டுள்ள கண்டன செய்தியில், “தலைநகரில் ஜனநாயகம் நசுக்கப்படுவது வன்மையாகக் கண்டிக்கத் தக்கது! டெல்லியில் நடைபெற்ற இளைஞர்களின் அறவழிப் போராட்டத்துக்கு ஆதரவாகக் களமிறங்கிய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி டெல்லி காவல்துறையால் இழுத்துச் செல்லப்பட்டும் குண்டுக் கட்டாகத் தூக்கிச் சென்றும் கைது செய்யப்பட்டது ஜனநாயக உரிமைகள் மீதான அப்பட்டமானத் தாக்குதலாகும். இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. நீட் தேர்வால் ஒவ்வோர் ஆண்டும் மாணவர்கள் பாதிப்புக் குள்ளாவது நின்றபாடில்லை. எனவே மத்திய அரசு நீட் தேர்வை முழுவதுமாக ரத்து செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்” என்று தவெக சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# செந்தில் பாலாஜி, அசோக் குமார் மனு தள்ளுபடி

## கைதவரா செந்தில் பாலாஜி?





**சென்னை.ஜூலை.22**

சோதனை, விசாரணை என்ற பெயரில் தங்களை துன்புறுத்தக் கூடாது என முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி மற்றும் அவரது சகோதரர் அசோக் குமார் ஆகியோர் தாக்கல் செய்த மனுக்களை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி மற்றும் அவரது சகோதரர் அசோக்குமார் ஆகியோர் தாக்கல் செய்த மனுக்களில், ‘ஊத்தங்கரை தவெக எம்.எல்.ஏ. இளையராஜாவிடம் குதிரை பேரம் நடத்தியதாக பதிவு செய்யப்பட்ட வழக்கில் எங்களுக்கு உயர் நீதிமன்றம் நிபந்தனை முன் ஜாமீன் வழங்கி உத்தரவிட்டது. உயர் நீதிமன்றத்தின் நிபந்தனையை கண்டிப்புடன் பின்பற்ற தயாராக இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழக அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக கணக்கு தீர்க்க வேண்டியுள்ளதாக வெளிப்படையாக கூறியுள்ளது. அதன்படி, ஏதேனும் ஒரு வழக்கில் தங்களை கைது செய்ய காவல் துறையினருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு உள்ளது. குதிரை பேர வழக்கில் எங்களை காவலில் வைத்து விசாரிக்க அவசியமில்லை என உயர் நீதிமன்றம் முன்ஜாமீன் வழங்கிய பின்னும், தொடர்ந்து சோதனைகள் நடத்தப் படுகின்றன. சட்டப்படியான எந்த புலன் விசாரணையயும் தடுக்கவில்லை. காவல் துறையில் நிலுவையில் உள்ள ஏதேனும் வழக்குகளின் விசாரணைக்கு நாங்கள் தேவைப்படுவதாக இருந்தால், பிஎன்எஸ்எஸ் சட்டத்தின் 35(3)வது பிரிவின் கீழ் முறையாக நோட்டீஸ் அனுப்ப காவல் துறைக்கு உத்தரவிட வேண்டும். எந்த விசாரணைக்கும் ஒத்துழைப்பு வழங்க தயாராக இருப்பதால் சோதனை, விசாரணை என்ற பெயரில் எங்களை துன்புறுத்தக் கூடாது என காவல் துறைக்கு உத்தரவிட வேண்டும்’ என மனுவில் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது. இந்த மனுக்கள், நீதிபதி ஜி.கே.இளந் திரையன் முன் விசாரணைக்கு வந்தபோது, “மனுவில் பொத்தாம் பொதுவான உத்தரவை கோருவதாலும், பல குற்றச்சாட்டுக்களை கூறியுள்ளதாலும், மனுவுக்கு விரிவான பதில் மனு தாக்கல் செய்ய அவகாசம் வழங்க வேண்டும்” என அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் ஜான் சத்யன் கோரிக்கை விடுத்தார். அதற்கு செந்தில் பாலாஜி, அசோக் குமார் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, “குதிரை பேர வழக்கில் முன் ஜாமீன் பெற்ற தங்களை வேறு வழக்குகளில் கைது செய்யக் கூடும் என அச்சம் உள்ளது. விசாரணை என்ற பெயரில் துன்புறுத்த கூடாது என உத்தரவிட வேண்டும்” என கோரிக்கை விடுத்தார். இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, “குதிரை பேர வழக்கில் முன் ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது. இன்னும் சரணடைந்து முன் ஜாமீன் பெறவில்லை. இந்த சூழ்நிலையில், தங்களை துன்புறுத்தக் கூடாது என கோர முடியாது. மற்ற வழக்குகளை பொறுத் தவரை, முன்கூட்டியே இந்த மனு தாக்கல் செய்யப் பட்டுள்ளதால், மனுதாரர் கோரியபடி எந்த உத்தரவையும் பிறப்பிக்க முடியாது” எனக் கூறி, இருவரின் மனுக்களையும் தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

த தலையங்கம்
மதுரை மணி
22.07.2026 புதன்
விசுவாவசு
தமிழ் வருடம்
ஆடி மாதம் 6ம் தேதி

## பரந்தூர் விமான நிலையம்
## முடிவெடுக்க வேண்டிய நேரம்



சென்னையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையமாக பரந்தூரை தேர்வு செய்தது, தமிழகத்தின் எதிர்கால விமானப் போக்குவரத்து வளர்ச்சியை முன்னிட்டு எடுக்கப்பட்ட முக்கியமான முடிவாகும். கடந்த ஆட்சியில் மத்திய அரசின் கொள்கை ஒப்புதல் பெறப்பட்டு, நிலம் கையகப்படுத்துதல் உள்ளிட்ட ஆரம்பப் பணிகளும் தொடங்கப்பட்டன. ஆனால் ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு, திட்டம் நிறுத்தப்பட்ட நிலையில் உள்ளது.

முதல்வர் விஜய் தலைமையிலான அரசு, தேர்தலுக்கு முன்பே பரந்தூர் விமான நிலையத்திற்கு எதிராக போராடிய மக்களுக்கு ஆதரவு தெரிவித்தது. அதன்பிறகு அமைச்சர்களும் திட்டம் செயல்படுத்தப்படாது, மாற்று இடம் தேர்வு செய்யப்படும் என கூறி வருகின்றனர். ஆனால் இதுவரை மத்திய அரசுக்கு அதிகாரப்பூர்வமாக திட்டத்தை கைவிடவோ, வேறு இடத்திற்கு மாற்றவோ எந்தக் கோரிக்கையும் அனுப்பப்படவில்லை என்று மத்திய அரசு நாடாளுமன்றத்தில் தெளிவாக தெரிவித்துள்ளது.

இந்த முரண்பாடான நிலைப்பாடு பல கேள்விகளை எழுப்புகிறது. ஒரு புறம் திட்டம் நிறுத்தப்பட்டதாக அரசியல் ரீதியில் கூறப்படுகிறது; மறுபுறம் நிர்வாக ரீதியாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் மக்களும், முதலீட்டாளர்களும், தொழில் துறையும் குழப்பத்தில் உள்ளன.

விமானநிலையம் போன்ற உள்கட்டமைப்பு திட்டங்கள் அரசியல் மாற்றங்களால் முடங்குவது மாநில வளர்ச்சிக்கு நல்லதல்ல. அதே நேரத்தில் விவசாய நிலங்கள், சுற்றுச்சூழல், மக்களின் வாழ்வாதாரம் ஆகியவற்றையும் புறக்கணிக்க முடியாது. எனவே வளர்ச்சியும், மக்கள் நலனும் சமநிலைப்படுத்தப்படும் தீர்வே அவசியம்.

### தீர்வு என்ன?

தமிழக அரசு இனியும் காலம் தாழ்த்தாமல் தனது இறுதி நிலைப்பாட்டை அதிகாரப்பூர்வமாக அறிவிக்க வேண்டும். பரந்தூர் பொருத்தமற்ற இடம் என்றால், தொழில்நுட்ப நிபுணர்கள், சுற்றுச்சூழல் வல்லுநர்கள், விமானப் போக்குவரத்து அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கருத்துடன் மாற்று இடத்தை விரைவாகத் தேர்வு செய்து மத்திய அரசுக்கு அதிகாரப்பூர்வமாக பரிந்துரைக்க வேண்டும். பரந்தூரே சிறந்த இடம் என அறிவியல் ஆய்வுகள் உறுதிப்படுத்தினால், பாதிக்கப்படும் மக்களுக்கு நியாயமான இழப்பீடு, மாற்று குடியிருப்பு, வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதி செய்து திட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

*மக்கள் நலனும், மாநில வளர்ச்சியும் இணையும் வகையில் தெளிவான முடிவை எடுப்பதே விஜய் அரசின் நிர்வாகத் திறனை வெளிப்படுத்தும்.*

## குடும்பக் கடனை அடைக்க
## மலேசியா சென்றவர் உயிரிழப்பு
## சாவில் மர்மம் இருப்பதாக குற்றச்சாட்டு

**தேனி.ஜூலை.22**

வருஷநாடு அருகே கோவில் பாறை மலைக்கிராமத்தைச் சேர்ந்த விஜயபாரதி (29), குடும்பக் கடனை அடைப்பதற்காக 5 மாதங்களுக்கு முன்பு மலேசியாவில் ஜவுளி நிறுவனத்தில் பணிக்குச் சென்றிருந்த நிலையில், மாரடைப்பால் உயிரிழந்ததாக அவரது குடும்பத்தினருக்கு தகவல் தெரிவிக்கப் பட்டுள்ளது. ஆனால், அவரது மரணத்தில் மர்மம் இருப்பதாக குற்றம் சாட்டியுள்ள மனைவி கார்த்திகா மற்றும் உறவினர்கள், அவருடன் பணியாற்றிய சிலர் தொடர்ந்து உடல் மற்றும் மனரீதியான தொந்தரவு



கொடுத்ததாக தெரிவித் துள்ளனர். இதுகுறித்து தேனி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ள குடும்பத்தினர், விஜயபாரதியின் உடலை அரசு செலவில் விரைவாக தாயகம் கொண்டு வரவும், மறுபிரேத பரிசோதனை செய்து மரணத்திற்கான உண்மையான காரணத்தை கண்டறிந்து, சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், மேலும் குடும்பத்திற்கு தமிழக அரசு உரிய நிவாரணம் வழங்கவும் கோரிக்கை விடுத்துள்ளனர்

## ஆலங்குளம் வட்டார மக்களின் பாரம்பரிய வழிபாட்டு உரிமை
## டி.டி.வி. தினகரனுக்கு அமமுக நகரச் செயலாளர் கோரிக்கை மனு

**நெல்லை.ஜூலை.22**

நெல்லை புறநகர் மேற்கு (தென்காசி மாவட்டம்) அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் நகரச் செயலாளர் எம்.எஸ். சுப்பையா, அமமுக பொதுச் செயலாளர் மக்கள் செல்வர் டி.டி.வி. தினகரன் அவர்களுக்கு கோரிக்கை மனு ஒன்றை அனுப்பியுள்ளார். அந்த மனுவில், தென்காசி மாவட்டம் ஆலங்குளம் வட்டார மக்களுக்கு ஆடி அமாவாசையை முன்னிட்டு, நெல்லை மாவட்டம் காரையார் அணைப் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு மகாலிங்க சுவாமி சினேகாம்பிகை சமேத சொரிமுத்து அய்யனார் திருக்கோவிலுக்கு பாரம்பரிய முறைப்படி சென்று வழிபட அரசு அனுமதி பெற்றுத் தருமாறு வலியுறுத்தியுள்ளார்.



மனுவில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: காரையார் அணைப் பகுதியில் பொதிகை மலைச்சாரலில் அமைந்துள்ள சொரிமுத்து அய்யனார் கோவில், தமிழகத்தின் மிகவும் பழமையான மற்றும் புகழ்பெற்ற காவல் தெய்வ வழிபாட்டுத் தலங்களில் ஒன்றாகும். ஆண்டுதோறும் ஆடி அமாவாசை திருவிழாவை முன்னிட்டு நெல்லை, தென்காசி, தூத்துக்குடி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த லட்சக்கணக்கான பக்தர்கள் இத்தலத்திற்கு வந்து வழிபடுவது வழக்கமாக உள்ளது. இத்திருவிழாவின் முக்கிய சிறப்பம்சமாக, பக்தர்கள் காப்புக்கட்டி, வனப்பகுதிக்குள் தற்காலிகக் குடிசைகள் (கொட்டகைகள்) அமைத்து, சுமார் 10 நாட்கள் தங்கி சமைத்து வழிபடும் பாரம்பரியம் பல தலைமுறைகளாக தொடர்ந்து வருகிறது. தற்போது இக்கோவில் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகப் பகுதிக்குள் அமைந்துள்ளதால், வன விலங்குகள் மற்றும் இயற்கை வளங்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் அரசின் விதிமுறைகளைப் பின்பற்றி, ஆலங்குளம் வட்டார மக்களுக்கு முன்னோர்கள் வழிபட்ட அதே பாரம்பரிய முறையில் 10 நாட்கள் தங்கி வழிபட அனுமதி வழங்க தமிழக அரசுக்கு கோரிக்கை வைக்க வேண்டும் என்று கோரியுள்ளார். மேலும், காரையார் அணைப்பகுதி மற்றும் சேர்வலாறு அணைப்பகுதிகளுக்கு பொதுமக்கள் சுற்றுலா சென்று வருவதற்கும் தமிழக அரசின் அனுமதியை பெற்றுத் தர நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் செல்வர் டி.டி.வி. தினகரன் அவர்களிடம் எம்.எஸ். சுப்பையா தனது கோரிக்கை மனுவில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்ட எதிர்ப்பு
## ராமநாதபுரத்தில் இந்திய ஜனநாயக கட்சி ஆர்ப்பாட்டம்

**ராமநாதபுரம்.ஜூலை.22**

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்ட எதிர்ப்பு தெரிவித்து இந்திய ஜனநாயக கட்சி சார்பில் ராமநாதபுரத்தில் ஆர்ப்பாட்டம் நடந்தது. ராமநாதபுரம் மாவட்டத் தலைவர் எஸ்.செல்வராஜ் தலைமை வகித்தார். சிவகங்கை மாவட்டத் தலைவர் போஸ், பரமக்குடி சட்டமன்றத் தொகுதி தலைவர் இ.முனியராஜ், காரைக்குடி சட்டமன்றத் தொகுதி தலைவர் அ.ஆ.இராமன் முன்னிலை வகித்தனர். இந்திய ஜன நாயக கட்சி மாநில இளைஞரணி துணை செயலர் சாய்சரவணன் சிறப்புரை ஆற்றினார். ராமநாதபுரம் மாவட்ட துணைத் தலைவர் சுவக்கீன், சிவகங்கை மாவட்ட செயலர் சுப்ரமணி, பரமக்குடி சட்டமன்றத்



தொகுதி செயலர் பா.கர்ணன், காரைக்குடி சட்டமன்றத் தொகுதி செயலர் ச.சுரேஷ்குமார் ஆகியோர் பேசினர். ராமநாதபுரம் மாவட்ட பொருளாளர் டேவிட் செல்வராஜ், பரமக்குடி ஒன்றியத் தலைவர் சு.செல்வகுமார், பரமக்குடி ஒன்றிய செயலர் சுப்ரமணியன், காரைக்குடி சட்டமன்றத் தொகுதி பொருளாளர் மதியரசன், விவசாய அணி நிர்வாகி து.சிவபாதம், வர்த்தக அணி நிர்வாகி செந்தில் குமார், ராமநாதபுரம் மாவட்ட பொறுப்பாளர்கள் சூரன், ஜெயசீலன், திருவாடானை சட்டமன்றத் தொகுதி மாணவரணி நிர்வாகி அன்பு உள்பட பலர் பங்கேற்றனர்.

## போதை ஒழிப்பு உறுதிமொழி
## இலச்சினை வெளியிட்டார் ஆணையர்

**சென்னை:.ஜூலை.22**

வியாசர்பாடி டாக் டர் அம்பேத்கர் கலைக் கல் லூரியில் நேற்று போதைப் பொருள் எதிர்ப்பு விழிப் புணர்வு முகாம் நடைபெற் றது. சென்னை காவல் ஆணையர் ஏ.அமல்ராஜ் நிகழ்ச்சியை தொடங்கிவைத் து, மாணவர்கள் மத்தியில் பேசியதாவது: இன்றைய சமூகத்தில் சாலை விபத் துகள், சைபர் மோசடிகள் மற்றும் போதைப்பழக் கம் ஆகியவை மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளன. சாலை விதிகளை முறை யாக கடைபிடித்தால் பெரும் பாலான விபத்துகளைத் தவிர்க்க முடியும். தமிழகத் தில் பொதுமக்கள் தின





மும் ரூ.13 கோடி முதல் ரூ.15 கோடி வரை சைபர் மோசடிகளால் பணத்தை இழக்கின்றனர். அறியாமை, விழிப்புணர்வு இல்லாததே இதற்கு முக்கிய காரணம். போதைப் பொருள், மது ஆகியவை ஒருவரின் குடும் பத்தையும் சமூகத்தையும் சீரழிக்கும். எனவே மாணவர் கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என் றார். முன்னதாக நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில், `வாழ்வைத் தேர்ந்தெடுங் கள், போதைக்கு இல்லை சொல்லுங்கள்' என்ற தலைப் பில் மாணவர்களின் மவுன நாடகம் அரங்கேற்றப்பட் டது. தொடர்ந்து சென்னை காவல் ஆணையர் அமல் ராஜ், `நான் போதைப் பொருளுக்கு எதிரானவன்' என்ற வாசகத்துடன் கூடிய புதிய போதைப் பொருள் எதிர்ப்பு இலச்சினையை அறி முகப்படுத்தினார். தொடர்ந்து அவரது தலைமையில் சுமார் 6 ஆயிரம் பள்ளி மற்றும் கல்லூரி மாணவமாணவிகள் போதைப் பொருளுக்கு எதி ராக உறுதிமொழி ஏற்றனர். இந்நிகழ்ச்சியில் கூடுதல் காவல் ஆணையர் கபில் குமார் சி.சரத்கர், கல்லூரி முதல்வர் கே.சிவகுமாரி, ஐஐடி மெட்ராஸ் சமூக முன் முயற்சி மற்றும் வெளித் தொடர்பு தலைவர் என்.ஹரி கிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சட்டவிரோத பணப்பரிமாற்ற புகார்
## சென்னையில் 2 இடங்களில் அமலாக்கத்துறை சோதனை



**சென்னை.ஜூலை.22**

தேனாம்பேட்டை, எல்லையம்மன் கோயில் தெருவைச் சேர்ந்தவர் தரணிதரன். இவர் போக்கு வரத்துத் துறையில் துணை ஆணையராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவர் தனது பணிக்காலத்தில் வரு மானத்துக்கு அதிகமாகச் சொத்து சேர்த்ததாகக் கூறப் படுகிறது. இது தொடர்பாக ஏற்கெனவே விசாரணை நடைபெற்று வந்த நிலை யில், சட்டவிரோத பணப் பரிமாற்ற தடுப்புச் சட்டத் தின் கீழ் அமலாக்கத் துறை யும் வழக்குப்பதிவு செய்து விசாரணையைத் தொடங் கியது. இதன் தொடர்ச் சியாக, நேற்று காலை முதல் தரணிதரன் வீட்டில் அமலாக்கத்துறை அதிகாரி கள் சோதனையில் ஈடுபட் டனர். இதேபோல், சென்னை திருவொற்றியூரைச் சேர்ந்த தொழிலதிபர் முருகேசன் என்பவரது வீட்டிலும் அமலாக்கத் துறையினர் சோதனை நடத்தினர். டிரான் ஸ்போர்ட் தொழில் செய்து வரும் இவருக்கும், இந்த சட்டவிரோத பணப்பரிமாற்ற வழக்குக்கும் தொடர்பு இருக் கலாம் என்ற சந்தேகத் தின் அடிப்படையில் இந்தச் சோதனை மேற்கொள்ளப்பட் டது. ஐதராபாத்தைச் சேர்ந்த அமலாக்கத் துறை அதி காரிகள் இந்தச் சோதனை யில் நேரடியாகப் பங்கேற் றதாகவும், இதில் முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப் பட்டதாகவும் கூறப்படுகிறது. தற்போது அந்த ஆவணங் களை ஆய்வு செய்யும் பணி நடைபெறுகிறது. ஆய்வு முடிந்த பிறகு கைப்பற்றப் பட்ட ஆவணங்கள் குறித்த விவரங்கள் வெளியிடப்படும் என அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.

## கொல்கத்தாவில் ஒரே நாளில்
## மம்தா, அதிருப்தி அணிபேரணி

**கொல்கத்தா.ஜூலை.22**

கொல்கத் தாவில் ஒரே நாளில் திரிணமூல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி தலைமையில் ஒரு பேரணியும், திரிணமூல் அதிருப்தி அணியினர் கலந்துகொண்ட பேரணி யும் நடைபெற்றதால் பரபரப்பு ஏற்பட்டது.தேர் தலுக்குப் பின்னர் மம்தா தலைமை மீது அதிருப்தி கொண்ட 58 எம்எல் ஏக்கள் கட்சியிலிருந்து விலகி தனி அணியாக செயல்பட்டு வருகின் றனர். அதைப் போலவே மக்களவையில் இருந்த 28 திரிணமூல் காங்கிரஸ் எம்.பி.க்களில் 20 பேர் கட்சியிலிருந்து விலகி இந்திய தேசிய குடிமக் கள் கட்சியில் இணைந்து தனியாக செயல்பட்டு வருகின்றனர். ஆட்சியை யும் இழந்து, கட்சி எம் எல்ஏக்கள், இந்நிலை யில் 1993ல் கலவரத்தில் உயிரிழந்த 13 இளைஞர் காங்கிரஸ் கட்சி நிர் வாகிகளின் நினைவாக 'ஷாஹித் திவஸ்' என்ற பேரணியை கொல்கத் தாவில் நேற்று பிர்லா கோளரங்கம் அருகே மம்தா பானர்ஜி தலைமை யிலான திரிணமூல் காங் கிரஸார் நடத்தினர். அதிருப்தி திரிணமூல் காங்கிரஸ் கட்சியினரும் இதுபோன்ற தியாகிகள் தின பேரணியை நடத் தினர். இரண்டுமே ஒரே நேரத்தில் நடைபெற்ற தால் சிறிது நேரம் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. மேலும், காங்கிரஸ் கட்சி சார்பிலும், நினைவேந்தல் பேரணி நேற்று கொல் கத்தாவில் நடைபெற் றது. பேரணியில் கலந் துகொண்ட திரிணமூல் தொண்டர்களிடையே மம்தா பேசியதாவது: நமது கட்சியிலிருந்து விலகி செயல்படும் கட்சி நிர்வாகிகள் திருடர்கள். அவர்களை மன்னிக்கவே கூடாது. நமது கட்சியி லிருந்து பிரிந்து பாஜக வில் இணைந்தவர்கள் தைரியமற்ற கோழைகள். அவர்களுக்கு தைரியம் இருந்தால், பாஜகவில் இணைந்த பின்னர் தேர் தலில் போட்டியிட வேண் டும். திரிணமூல் காங் கிரஸ் கட்சி சின்னத் தில் வெற்றி பெற்றுவிட்டு முதுகில் குத்திய துரோகி களை நான் மன்னிக் க மாட்டேன். இவ்வாறு அவர் பேசினார்.

## 2026ன் கடைசி சந்திர கிரகணம்
### இந்த 4 ராசிக்காரர்கள் கூடுதல் கவனம்





2026ஆம் ஆண்டின் இரண்டாவது மற்றும் கடைசி சந்திர கிரகணம் ஆகஸ்ட் 28 ஆம் தேதி "வெள்ளிக்கிழமை"ஆவணி பௌர்ணமி நாளில் நிகழ உள்ளது. இந்திய நேரப்படி காலை 6.53 மணி முதல் மதியம் 12.32 மணி வரை (5 மணி 39 நிமிடங்கள்) இந்த கிரகணம் நீடிக்கும். அப்போது சந்திரன் கும்ப ராசியில் சதய நட்சத்திரத்தில் சஞ்சரிக்க, சூரியன் சிம்ம ராசியில் இருப்பதால் சந்திர கிரகணம் ஏற்படுகிறது.

இந்த கிரகணத்தின் போது நிலவின் சுமார் 96 சதவீத பகுதி பூமியின் நிழலால் மறைக்கப்படும். இருப்பினும், இந்த கிரகணம் இந்தியாவில் தெரியாது. எனவே இந்தியாவில் சூதக காலம் அமலில் இருக்காது. இதனால் ஆவணி அவிட்டம் மற்றும் ரக்ஷா பந்தன் பண்டிகைகளை எந்த தடையும் இன்றி வழக்கம்போல் கொண்டாடலாம்.

இந்த சந்திர கிரகணம் வட மற்றும் தென் அமெரிக்கா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா உள்ளிட்ட பல நாடுகளில் தென்படும். குறிப்பாக அமெரிக்க கண்டங்களில் முழு கிரகணத்தையும் தெளிவாகக் காண முடியும்.

ஜோதிடக் கணிப்புகளின்படி, இந்த கிரகணத்தின் தாக்கம் அனைத்து ராசிகளிலும் ஓரளவு இருந்தாலும், சிம்மம், விருச்சிகம், மகரம் மற்றும் கும்பம் ஆகிய ராசிக்காரர்கள் கூடுதல் கவனத்துடன் இருக்க வேண்டும் என கூறப்படுகிறது. முக்கிய முடிவுகள் எடுப்பது, தேவையற்ற வாக்குவாதங்களில் ஈடுபடுவது, அதிக செலவுகள் செய்வது போன்றவற்றில் எச்சரிக்கையுடன் இருக்க அறிவுறுத்தப்படுகிறது.

குறிப்பு: மேற்கண்ட தகவல்கள் ஜோதிட நம்பிக்கைகளின் அடிப்படையில் வழங்கப்பட்டவை. இவை அறிவியல் ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டவை அல்ல. தனிப்பட்ட நம்பிக்கையின் அடிப்படையில் மட்டுமே இதனை அணுகுவது நல்லது.



**சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மாநகராட்சியின் திமுகவின் மூன்றாவது வார்டு செயலாளர் முகமது கனி அவர்கள் தலைமையில் தமிழ்நாட்டின் கனிம வளம் மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் டாக்டர் டி கே பிரபு முன்னிலையில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் இணைந்தனர்.**



**திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க், தலைமையில் ஜமுனாமரத்தூர் வட்டம், செயிண்ட் ஜோசப் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் நடைபெற்ற ஜவ்வாது மலை 26வது கோடை விழா நிறைவு நாள் நிகழ்ச்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் வைக்கப்பட்ட அரசு நலத்திட்டங்கள் குறித்த புகைப்பட கண்காட்சியைப் பொதுமக்கள் ஆர்வத்துடன் கண்டுகளித்தனர்.**





**தேனி மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில் இன்று மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநர் எம்.சுந்தரேஸ் பாபு, இ.ஆ.ப.. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**




# இந்த 5 காலை பழக்கங்கள் இதயத்தை ஆபத்தில் தள்ளும்



*காலையில் நாம் கடைப்பிடிக்கும் சில பழக்கவழக்கங்கள், இதய ஆரோக்கியத்தில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். குறிப்பாக அதிகாலை நேரங்களில் மாரடைப்பு மற்றும் பக்கவாதம் ஏற்படும் அபாயம் அதிகமாக இருப்பதால், காலை பழக்கங்களில் கவனம் செலுத்துவது அவசியம்.*

### இதய நோய் அபாயத்தை அதிகரிக்கும் 5 காலை பழக்கங்கள்:

**1. காலையில் தண்ணீர் குடிக்காமல் இருப்பது**

இரவு முழுவதும் உடலில் நீர்ச்சத்து குறைவதால், காலை எழுந்தவுடன் போதுமான அளவு தண்ணீர் அருந்த வேண்டும். இல்லையெனில், இரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு இதயத்தின் வேலைப்பளு அதிகரிக்கலாம்.

**2. வார்ம்அப் செய்யாமல் உடற்பயிற்சி தொடங்குவது**

உடலை தயார் செய்யாமல் நேரடியாக கடுமையான உடற்பயிற்சியில் ஈடுபடுவது, இதயத்திற்கு திடீர் அழுத்தத்தை ஏற்படுத்தும். எனவே முதலில் லேசான வார்ம்அப் செய்வது அவசியம்.

**3.இரத்த அழுத்தத்தை கண்காணிக்காமல் இருப்பது**

உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்கள் காலையில் ரத்த அழுத்தத்தை பரிசோதிப்பது நல்லது. ஏனெனில் அதிகாலை நேரத்தில்தான் ரத்த அழுத்தம் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

**4.அதிக உப்பு மற்றும் ஜங்க் உணவுகளை காலை உணவாக சாப்பிடுவது**

சோடியம் அதிகம் உள்ள துரித உணவுகள் ரத்த அழுத்தத்தை உயர்த்தி, நீண்ட காலத்தில் இதய நோய் அபாயத்தை அதிகரிக்கக்கூடும். அதற்கு பதிலாக சத்தான காலை உணவைத் தேர்வு செய்ய வேண்டும்.

**5. காலை உணவை தவிர்ப்பது**

காலை உணவை தவிர்ப்பதால் ரத்தச் சர்க்கரை மற்றும் ரத்த அழுத்தத்தில் மாற்றங்கள் ஏற்பட்டு, மாரடைப்பு மற்றும் பக்கவாதம் ஏற்படும் அபாயம் அதிகரிக்கலாம்.

**மருத்துவர்களின் ஆலோசனை:**

தினமும் போதுமான தண்ணீர் அருந்துதல், லேசான வார்ம்அப்புக்குப் பிறகு உடற்பயிற்சி செய்தல், சத்தான காலை உணவை உட்கொள்ளுதல் மற்றும் ரத்த அழுத்தத்தை கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் போன்ற நல்ல பழக்கங்கள் இதயத்தை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும்.

**குறிப்பு:**

இந்த தகவல் பொதுவான உடல்நல விழிப்புணர்வுக்காக மட்டுமே. உங்களுக்கு இதய நோய், உயர் ரத்த அழுத்தம் அல்லது பிற உடல்நலப் பிரச்சனைகள் இருந்தால், மருத்துவரின் ஆலோசனையைப் பெறுவது அவசியம்.

# பழனி கோவில் நில மோசடி சிபிஐ விசாரணை கோரி உண்ணாவிரதம்



**பழனி.ஜூலை.22**

பழனி முருகன் கோவில் நிர்வாகத்தின் கீழ் இருந்த தண்டபாணி சுவாமி மடத்துக்குச் சொந்தமான ரூ.100 கோடி மதிப்பிலான நிலம் முறைகேடாக விற்கப் பட்டதாகக் கூறப்படும் விவகாரத்தை சிபிஐ விசாரிக்க வேண்டும் என வலியுறுத்தி, வரும் ஜூலை 26ஆம் தேதி உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும் என்று இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் தெரிவித்தார். பழனியில் சர்ச்சைக் குரிய நிலத்தை பார்வையிட்ட அவர், பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், கோவில் சொத்துகள் முறைகேடாக கைமாறியுள்ளதாக குற்றம்சாட்டினார். இந்த விவகாரத்தில் சிபிஐ விசாரணை நடத்த வேண்டும் என்றும், கோவில் நிர்வாகத்தில் இருந்து அரசு விலகி தனி வாரியம் அமைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். மேலும், கோவில்களில் தரிசனக் கட்டணத்தை ரத்து செய்யக் கோரி மாநிலம் முழுவதும் ஜூலை 26ஆம் தேதி இந்து முன்னணி சார்பில் ஆர்ப்பாட்டமும் நடைபெற உள்ளதாக அவர் தெரிவித்தார்.



**விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் வட்டம், சேத்தூரில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தென்னை விவசாயிகளிடமிருந்து மின்னணு தேசிய வேளாண் சந்தை மூலம் நேரடியாக வியாபாரிகளுக்கு தேங்காய் விற்பனையை மாவட்ட ஆட்சியர் மரு.என்.ஓ.சுகபுத்ரா தொடங்கி வைத்து பார்வையிட்டார்.**

# கர்நாடகாவில் அமைச்சரவை விரைவில் விரிவாக்கம்

**பெங்களூரு.ஜூலை.22:**

கர்நாடகாவில் கடந்த ஜூன் 3ம் தேதி டி.கே.சிவகுமார் முதல்வராக பொறுப்பேற்றார். அவருடன் துணை முதல்வராக பரமேஷ்வரும் அமைச்சர்களாக 12 பேரும் பதவி ஏற்றனர். அமைச்சரவையில் 20 இடங்கள் காலியாக உள்ளன. இந்நிலையில் முதல்வர் டி.கே.சிவகுமார், மாநில காங்கிரஸ் தலைவர் பி.கே.ஹரி பிரசாத், முன்னாள் முதல்வர் சித்தராமையா ஆகியோர் நேற்று டெல்லி சென்றனர். அங்கு கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் உள்ளிட்டோரை சந்தித்து அமைச்சரவை விரிவாக்கம் குறித்து பேசினர். பின்னர் டி.கே.சிவகுமார் கூறுகையில், “கர்நாடகாவில் விரைவில் அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்படும்” என்றார்.





**தமுஎகச அமைப்பு தினத்தில், நூல் அறிமுகம் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் பெரியகுளம் கிளை சார்பில் அமைப்பு தின சிறப்பு நிகழ்வு தெற்கு அக்ரஹாரம் அன்பு டாக்குமெண்ட் இல்லத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் "கர்ம வீரர் காமராஜர்" "துளைகளில்லாப் புல்லாங்குழல்" "தைலா" ஆகிய நூல்களை எழுத்தாளர் கிருஷ்ணன், முனைவர் சு. முத்தையா, யாழ் தண்விகா அறிமுகம் செய்து மதிப்புரை வழங்கினர்.அதன்பின்னர் அமைப்பு தினம் குறித்து கவிஞர் இர.அறிவழகன், பேச்சாளர் சதீஷ்குமார் எழுத்தாளர்களின் எழுத்து வலிமை குறித்து உரையாற்றினர். இந்நிகழ்வில் பங்கேற்ற எழுத்தாளர்கள் அனைவரையும் மருத்துவர் இளங்கோவன் வரவேற்று உரையாற்றினார். இதனைத் தொடர்ந்து கிளை பொருளாளர் வழக்கறிஞர் சுரபி நன்றி கூறினார்.**

# வேலை வாய்ப்பு

## இந்திய கடற்படையில் 275 அதிகாரி பணியிடங்கள்

இந்திய கடற்படையில் 275 அதிகாரி பணியிடங்கள் இந்திய கடற்படை (Indian Navy) ஜூன் 2027 Short Service Commission (SSC) Officer Course க்கான 275 அதிகாரி (Officer) பணியிடங்களை நிரப்புவதற்கான ஆட்சேர்ப்பு அறிவிப்பை வெளியிட்டுள்ளது. தகுதியான திருமணமாகாத ஆண் மற்றும் பெண் பட்டதாரிகள் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம்.

முக்கிய விவரங்கள்

- நிறுவனத்தின் பெயர்: இந்திய கடற்படை (Indian Navy)
- வேலைவகை: மத்திய அரசு வேலை
- பணி வகை: நிரந்தர பணி (Regular Basis)
- மொத்த காலிப்பணியிடங்கள்: 275
- பணியிடங்கள்: Short Service Commission (SSC) Officers – பல்வேறு பிரிவுகள் (June 2027 Course)
- பணியிடம்: இந்தியா முழுவதும்
- விண்ணப்பம் தொடங்கிய தேதி: 25.06.2026
- விண்ணப்பிக்க கடைசி தேதி: 27.07.2026
- விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்

இந்திய கடற்படை (Indian Navy): https://www.joinindiannavy.gov.in/

## காட்டன் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியாவில் 148 பணியிடங்கள்

காட்டன் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியாவில் 148 பணியிடங்கள் மத்திய ஜவுளித்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தி காட்டன் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட் (CCI) நிறுவனத்தில் 148 காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான ஆட்சேர்ப்பு அறிவிப்பு (அறிவிப்பு எண்: DR/CCI/2026) வெளியிடப்பட்டுள்ளது. தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம்.

பணியிட விவரங்கள்:

- Assistant Manager (Official Language)
- Assistant Manager (Information Technology)
- Management Trainee (Marketing)
- Management Trainee (Accounts)
- Junior Commercial Executive
- Junior Assistant (Accounts)
- Junior Assistant (General)

மொத்த காலிப்பணியிடங்கள்: 148

பணியிடம்: இந்தியா முழுவதும்

பணி வகை: நிரந்தர பணி (Regular Basis)

பணிப்பிரிவு: மத்திய அரசு வேலை

விண்ணப்பம் தொடங்கும் தேதி:

09.07.2026 காலை 10.00 மணி

விண்ணப்பிக்க கடைசி தேதி: 2

4.07.2026 இரவு 11.55 மணி

விண்ணப்பிக்கும் முறை:

ஆன்லைன் https://cotcorp.org.in/

அதிகாரப்பூர்வ இணையதளம்

காட்டன் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா (CCI)

தகுதி, வயது வரம்பு, ஊதியம் மற்றும் தேர்வு முறை உள்ளிட்ட முழு விவரங்களை அதிகாரப்பூர்வ அறிவிப்பில் பார்த்து, கடைசி தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது

## ஜே.என்.யு(JNU) 267நிரந்தர பணியிடங்கள்

ஜே .என். யு (JNU) 267 நிரந்தர பணியிடங்கள்

மத்திய கல்வி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் (JNU), 267 நிரந்தர (Regular Basis) அலுவலக மற்றும் தொழில்நுட்ப சாரா (Non-Teaching) பணியிடங்களை நிரப்புவதற்கான ஆட்சேர்ப்பு அறிவிப்பை (அறிவிப்பு எண்: 01/RC(NT)/2026) வெளியிட்டுள்ளது. தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம்.

முக்கிய விவரங்கள்

- நிறுவனத்தின் பெயர்: ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் (Jawaharlal Nehru University – JNU)
- அறிவிப்பு எண்: 01/RC(NT)/2026
- வேலை வகை: மத்திய அரசு வேலை
- பணி வகை: நிரந்தர பணி (Regular Basis)
- மொத்த காலிப்பணியிடங்கள்: 267
- பணியிடங்கள்: Non-Teaching (Group A, Group B, Group C)
- பணியிடம்: நியூ டெல்லி
- விண்ணப்பம் தொடங்கிய தேதி: 04.07.2026
- விண்ணப்பிக்க கடைசி தேதி: 27.07.2026
- விண்ணப்பிக்கும்முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம் :ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் (JNU): https://www.jnu.ac.in/

## ஓஎன்ஜிசி (ONGC) நிறுவனத்தில் 52 பணியிடங்கள்

மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான ஆயில் அண்ட் நேச்சுரல் கேஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் (ONGC), Geologists மற்றும் Engineers (E1 Level) பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு எண்: 2/2026 (R&P)-ஐ வெளியிட்டுள்ளது. மொத்தம் 52 காலிப்பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம்.

முக்கிய விவரங்கள்

- நிறுவனத்தின் பெயர்: ஆயில் அண்ட் நேச்சுரல் கேஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் (ONGC)
- அறிவிப்பு எண்: 2/2026 (R&P)
- வேலைவகை: மத்திய அரசு வேலை
- பணி வகை: நிரந்தர பணி (Regular Basis)
- மொத்த காலிப்பணியிடங்கள்: 52
- பணியிடங்கள்: Geologists மற்றும் Engineers (E1 Level)
- பணியிடம்: இந்தியா முழுவதும்
- விண்ணப்பம் தொடங்கும் தேதி: 17.07.2026
- விண்ணப்பிக்க கடைசி தேதி: 31.07.2026 இரவு 11.59 மணி
- விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம் :ஓஎன்ஜிசி (ONGC): https://www.ongcindia.com/

## ஆர்மர்டு வெகிகிள்ஸ் நிகாம் லிமிடெட் 1,213 பணியிடங்கள்

AVNL ஆட்சேர்ப்பு 2026

1,213 பணியிடங்கள்

- நிறுவனத்தின் பெயர்:
  ஆர்மர்டு வெகிகிள்ஸ் நிகாம் லிமிடெட்
  (AVNL – Armoured Vehicles Nigam Limited)
- அறிவிப்பு எண்: AVNL/CO/HR/2026/06
- பணியகம்: மத்திய அரசு (பாதுகாப்புத் துறை பொதுத்துறை நிறுவனம்)
- பணியின் வகை: ஒப்பந்த (Contract Basis) பணி
- காலிப்பணியிடங்கள்
  மொத்தம் 1,213 (Executive & Non-Executive) பணியிடங்கள்
- பணியிடம்: ஆவடி (சென்னை), ஜபல்பூர் (மத்தியப் பிரதேசம்), மேடக் (தெலங்கானா), அம்பர்நாத் (மகாராஷ்டிரா) உள்ளிட்ட AVNL அலகுகள்
- ஆன்லைன் விண்ணப்பம் தொடங்கும் தேதி
  11.07.2026 காலை 10.00 மணி
- விண்ணப்பிக்க கடைசி தேதி
  25.07.2026 இரவு 11.59 மணி
- விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
- அதிகாரப்பூர்வ இணையதளம்
  https://avnl.co.in

இந்த ஆட்சேர்ப்பின் மூலம் ஜூனியர் டெக்னீஷியன், ஜூனியர் மேனேஜர், அசிஸ்டன்ட் மேனேஜர், டெபுட்டி மேனேஜர், சீனியர் மேனேஜர், டெபுட்டி ஜெனரல் மேனேஜர், அடிஷனல் ஜெனரல் மேனேஜர் மற்றும் கன்சல்டன்ட் உள்ளிட்ட பல்வேறு Executive மற்றும் Non-Executive பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன



**திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் மண்டலம்2, வார்டு17, தீரன் சின்னமலை வடக்கு பேருந்து நிலையத்தில் நீண்ட நாட்களாக குத்தகைக்கு போகாமல் இருக்கும் கடைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் குறித்து பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் சுகாதார அலுவலர் (பொ) கோகுலநாதன், மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.**



**தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியத்தில் சடையால்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் வகுப்பறைக் கட்டிடம் சீரமைக்கப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

# இன்றைய கார்ட்டூன்




## பிரிட்டனின் புதிய பிரதமராக பர்ன்ஹாம்



**லண்டன்.ஜூலை.22**

பிரிட்டனின் 59வது பிரதமராக ஆன்டி பர்ன்ஹாம் நேற்று பதவியேற்றார். இவர் கடந்த 10 ஆண்டுகளில் பொறுப்பேற்கும் 7வது பிரதமர் ஆவார். பிரிட்டனில் கடந்த 2024ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தொழிலாளர் கட்சி வெற்றி பெற்றதை தொடர்ந்து அதன் தலைவரான கெய்ர் ஸ்டார்மர் பிரதமராக பதவியேற்றார். 2024ம் ஆண்டு ஜூலை 5ம் தேதி பதவியேற்ற ஸ்டார்மர் கடந்த 2 ஆண்டுகளாக பிரதமராக பதவி வகித்து வந்தார். இந்நிலையில் உள்ளாட்சி தேர்தலில் தொழிலாளர் கட்சிக்கு ஏற்பட்ட தோல்வி உள்ளிட்ட காரணங்களுக்காக பிரதமர் பதவியில் இருந்து விலகுவதாக ஸ்டார்மர் கடந்த ஜூன் 22ம் தேதி அறிவித்தார். இதையடுத்து நடைபெற்ற தொழிலாளர் கட்சியின் கூட்டத்தில் கட்சியின் புதிய தலைவராகவும் பிரதமராகவும் 56 வயதான ஆன்டி பர்ன்ஹாம் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். கெய்ர் ஸ்டார்மர் மன்னர் சார்லஸை சந்தித்து தனது ராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்தார். இதையடுத்து புதிய அரசை அமைக்குமாறு மன்னர் சார்லஸ் விடுத்த அழைப்பை பர்ன்ஹாம் முறைப்படி ஏற்றுக்கொண்டார். இந்நிலையில் பிரிட்டனின் 59வது பிரதமராக ஆன்டி பர்ன்ஹாம் நேற்று பதவியேற்றுக் கொண்டார். வடக்கின் ராஜா என்ற செல்லமாக அழைக்கப்படும் பர்ன்ஹாம் ஏற்கெனவே கிரேட்டர் மான்செஸ்டரின் மேயராக பணியாற்றியுள்ளார். பிரதமராக பர்ன்ஹாம் பதவியேற்ற பிறகு அவர் தனது முதல் உரையில் பிரிட்டனுக்கு ஒரு புதிய பாதையைவகுக்க இருப்பதாகவும் வாழ்க்கைச் செலவுகளை எளிதாக்குவதிலும் பிராந்திய ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதிலும் கவனம் செலுத்தவுள்ளதாக கூறினார்.

## டாஸ்மாக் பார்களில் புகையிலை விற்க தடை

**சென்னை.ஜூலை.22**

டாஸ்மாக் பார்களில் புகையிலை பொருட்களை விற்பனை செய்யக் கூடாது என நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. இதுகுறித்து, பிறப்பிக்கப் பட்டுள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது: மதுக்கூடத்தில் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை விற்பனை செய்யக் கூடாது. மேலும், பீடி, சிகரெட் போன்றவை விற்க கூடாது. தமிழக அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட ஒருமுறை மட்டும் பயன்படுத்தி தூக்கி எறியக்கூடிய மட்காத, மறுசுழற்சி செய்ய இயலாத பிளாஸ்டிக் பொருட்களை மதுக் கூடங்களில் பயன்பாட்டில் இருக்கக் கூடாது. தண்ணீர் பாட்டில், குளிர்பானங்கள், நொறுக்கு தீனிகள் அதிக விலைக்கு விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அதன் விலைப் பட்டியலை பார்வைக்கு வைப்பதுடன் அவை சுகாதாரமான முறையில் தயாரிக்கப்பட்டதாக அரசின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு இருத்தல் அவசியம். தின்பண்ட பொருள்கள், உணவு பொருள் தரக்கட்டுபாட்டு சோதனைக்கு உட்படுத்தப் படும். டாஸ்மாக் நிர்வாகத்தால் நிர்ணயிக்கப் படும் நேரத்தில் மட்டுமே மதுக்கூடங்கள் செயல்பட வேண்டும். நிர்வாகத்தால் நிர்ணயிக்கப்படும் வேலை நேரத்தின் போது மட்டுமே ஒப்பந்த தாரருக்கும், பணியாளர்களுக்கும் மதுக் கூடத்தில் அனுமதியளிக்கப்படும். டாஸ்மாக் கடையின் விடுமுறை நாட்களிலோ அல்லது நிர்வாகத்தால் நிர்ணயிக்கப் படும் வேலை நேரத்துக்கு அப்பாற்பட்டோ மதுக்கூடம் திறந்து வைத்திருந்தால் உடனடியாக இந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்படும். மேலும், காப்புத் தொகையை திரும்பப் பெற இயலாது. இவ்வாறு உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈரான் மீது தாக்குதல் நடத்தவில்லை என்றால் இஸ்ரேல் அழிந்திருக்கும்:ட்ரம்ப்



**வாஷிங்டன்.ஜூலை.22**

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா நடத்திய ராணுவத் தாக்குதல்களே இஸ்ரேல் நாட்டின் பாதுகாப்புக்கு மிக முக்கியக் காரணமாக அமைந்தது என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். லெபனான் அதிபர் ஜோசப் அவ்ன் பதவியேற்ற பிறகு முதன்முறையாக வெள்ளை மாளிகைக்கு வருகை தந்திருந்தார். அவருடனான சந்திப்பில் பேசிய ட்ரம்ப், "நாங்கள் ஈரான் மீது தாக்குதல் நடத்தாமல் இருந்திருந்தால், இன்று இஸ்ரேல் என்ற ஒரு நாடே இருந்திருக்காது" என்று தெரிவித்தார். ஈரானின் ராணுவத் திறனைக் குறைக்க அமெரிக்கா நடத்திய தாக்குதல்கள், மத்திய கிழக்கில் தனது முக்கியக் கூட்டாளியான இஸ்ரேலைப் பாதுகாக்க உதவியதாக அவர் கூறினார். அமெரிக்காவின் ஆதரவுடன் லெபனான் மற்றும் இஸ்ரேல் இடையே உருவாக்கப் பட்டுள்ள பாதுகாப்பு ஒப்பந்தத்தின் கீழ், தெற்கு லெபனானில் இருந்து இஸ்ரேல் படைகள் படிப்படியாக விலக்கிக் கொள்ளப்பட்டு, அங்கு லெபனான் தேசிய ராணுவத்தின் கட்டுப்பாடு விரிவாக்கப் பட்டு வருகிறது. இது குறித்துப் பேசிய ட்ரம்ப், இஸ்ரேல் படைகளைத் திரும்பப் பெறும் பணியில் ஈடுபட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். அதேவேளையில், தெற்கு லெபனானில் இருந்து இஸ்ரேல் முழுமையாக வெளியேறுவதை உறுதி செய்ய அமெரிக்கா அதிக அழுத்தம் தர வேண்டும் என லெபனான் அதிபர் ஜோசப் அவ்ன் கேட்டுக் கொண்டார். மேலும், ஹிஸ்புல்லா அமைப்பைக் கட்டுப்படுத்தவும், தெற்குப் பகுதியில் அமைதியை ஏற்படுத்தவும் லெபனான் ராணுவத்திற்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்துக்குள்

## கும்பல் தாக்குதல் நடக்குமோ என பயந்தோம்:கங்கனா பகிர்வு



**புதுடெல்லி.ஜூலை.22**

நீட் வினாத்தாள் கசிவு விவகாரத்தில் மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வலியுறுத்தி, சிஜேபி நடத்திய 'சலோ சன்சாத்' பேரணியின் போது, நாடாளுமன்றத்துக்குள் இருந்த எம்பிக்கள் அனைவரும் பேரணியாக வந்த கும்பல் தங்கள் மீது தாக்குதல் நடத்திவிடுமோ என்று அச்சமடைந்ததாக நடிகையும் பாஜக எம்பி யுமான கங்கனா ரணாவத் தெரிவித்துள்ளார். மழைக்காலக் கூட்டத் தொடரின் முதல் நாளில் பல்லாயிரக் கணக்கான போராட்டக் காரர்கள் நாடாளுமன்றத்தை நோக்கி முன்னேறிய நிலையில், அசம்பாவிதங்கள் ஏதும் நடக்காமல் தடுத்த டெல்லி காவல்துறையினரை பாராட்டிய கங்கனா, "நாங்கள் அனைவரும் மக்களவைக்குள் இருந்தோம். இந்த கும்பல் எங்களைத் தாக்கிவிடுமோ என்று நாங்கள் மிகவும் பயந்தோம். அசம்பாவிதங்கள் நடக்காமல் கேடயமாகச் செயல்பட்டு எங்களைப் பாதுகாத்த டெல்லி காவல்துறையினரைப் பாராட்டுகிறேன்" என்று செய்தியாளர்களிடம் கூறினார். மேலும், தேசிய ஜனநாயகக் கூட்டணி எம்பிக்கள் கூட்டத்தில் பிரதமர் மோடி ஆற்றிய உரை குறித்துப் பேசிய கங்கனா, இளைஞர்கள் சார்ந்த பிரச்சினைகளில் எம்பிக்கள் நேரடியாகக் கவனம் செலுத்தி, அவர்களின் சந்தேகங்களுக்கு நேர்மறையாகப் பதிலளிக்க வேண்டும் எனப் பிரதமர் அறிவுறுத்தியதாகத் தெரிவித்தார். "அறிவியல் துறை சாதனைகள் மற்றும் ஹைட்ரஜன் ரயில் திட்டம் போன்றவை குறித்து விரிவாகப் பேச வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார்" எனக் குறிப்பிட்டார். முன்னதாக, போராட்டக்காரர்கள் அரசை நிர்பந்தித்து அமைச்சர்களை ராஜினாமா செய்ய வைக்க முடியாது என்று தெரிவித்திருந்த கங்கனா, விவாதங்களை நாடாளுமன்றத்துக் குள்ளேயே நடத்த வேண்டும் என வலியுறுத்தினார்

## ஜாலியன் வாலாபாக் போன்று தாக்குதல் சிஜேபி போராட்டக்காரர்கள் குற்றச்சாட்டு


### கேஜ்ரிவாலும் சரமாரி தாக்கு



**புதுடெல்லி.ஜூலை.22**

நாடாளுமன்ற பேரணியின்போது ஜாலியன் வாலாபாக் போன்று கொடூர தாக்குதல் நடத்தப்பட்டது என்று கரப்பான்பூச்சி ஜனதா கட்சியை (சிஜேபி) சேர்ந்த போராட்டக்காரர்கள் குற்றம் சாட்டி உள்ளனர். நீட் தேர்வு முறைகேட்டுக்கு பொறுப்பேற்று மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகக் கோரி சிஜேபி சார்பில் நேற்று முன்தினம் நாடாளுமன்றம் நோக்கி பேரணி நடத்தப்பட்டது. இதில் ஆயிரக் கணக்கானோர் பங்கேற்றனர். அப்போது போராட்டக்காரர்களை கலைக்க டெல்லி போலீஸார் தடியடி நடத்தி, கண்ணீர் புகைக்குண்டுகளை வீசினர். இதில் 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். பேரணியில் பங்கேற்ற ஹைதராபாத்தைச் சேர்ந்த விஜய் டேனியல் கூறும்போது, “சோனம் வாங்சுக்கின் மனைவி கீதாஞ்சலி உடன் பேருந்தில் பயணம் செய்தேன். அந்த பேருந்துக்குள் போலீஸார் ஏறி எங்கள் மீது தாக்குதல் நடத்தினர். பேருந்தில் இருந்து வலுக்கட்டாயமாக கீழே இறக்கப்பட்டோம். இருபுறத்தில் இருந்தும் போலீஸார் தடியடி நடத்தினர். அவர்களிடம் இருந்து தப்பிக்க போராட்ட மேடைக்கு அடியில் பதுங்கினேன். காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க வந்த மருத்துவர் உட்பட பலரும் மேடைக்கு அடியில் பதுங்கி இருந்தனர். ஆனால் போலீஸார் எங்களை வெளியே இழுத்து தாக்குதல் நடத்தினர். எனக்கு கழுத்தில் பலத்த அடி விழுந்தது. ஜாலியன் வாலாபாக் போன்று மிகக் கொடூரமாக தாக்குதல் நடத்தப்பட்டது” என்றார். டெல்லி முன்னாள் முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவால் கூறும் போது, “1919ல் ஜாலியன்வாலா பாக்கில் அப்பாவி மக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்த உத்தரவிட்ட பிரிட்டிஷ் அதிகாரி ஜெனரல்டயரின் கொடூரத்தையே மோடி மிஞ்சிவிட்டார் என்று தோன்றுகிறது” என்றார். டெல்லி போலீஸ் தரப்பில் கூறும்போது, “நாடாளுமன்ற பேரணிக்கு அனுமதி வழங்கப்படவில்லை. சட்ட விரோதமாக கூடிய போராட்டக்காரர்களை தடுத்து நிறுத்தினோம். சுமார் 35,000 பேர் கூடுவார்கள் என்று கணித்திருந்தோம். ஆனால் அதைவிட இருமடங்கு கூட்டம் கூடியது. சுமார் 2,000 போலீஸார் மற்றும் மத்திய பாதுகாப்பு படைகளை சேர்ந்த 20 கம்பெனி வீரர்கள் மூலம் பேரணி தடுத்து நிறுத்தப்பட்டது. போலீஸ் தரப்பில் மூத்த அதிகாரிகள் உட்பட 118 பேர் காயமடைந்துள்ளனர். 70 பேரிடம் தொடர் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. சட்டம், ஒழுங்கை மீறியதாக பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள்ளன. சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்து வருகிறோம்” என்றனர்.

## Hockey WC: ஹர்மன்பிரீத் தலைமையில் 20 வீரர்கள் அடங்கிய இந்திய அணி அறிவிப்பு




**புதுடெல்லி.ஜூலை.22**

எஃப்ஐஎச் ஆடவர் ஹாக்கி உலகக் கோப்பை தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. 20 வீரர்கள் அடங்கிய இந்திய அணியை ஹர்மன்பிரீத் சிங் வழிநடத்துகிறார். அடுத்த மாதம் ஹாக்கி உலகக் கோப்பை தொடர் 2026 பெல்ஜியம் மற்றும் நெதர்லாந்தில் நடைபெறுகிறது. ஆகஸ்ட் 14 முதல் 30ம் தேதி வரையில் நடைபெறும் இந்த தொடரில் 16 அணிகள் பங்கேற்று விளையாடு கின்றன. இரண்டு நகரத்தில் அமைந்துள்ள மைதானங்களில் இந்த ஆட்டம் நடை பெறுகிறது. குரூப் சுற்றான முதல் சுற்று ஆட்டத்தில் நான்கு பிரிவுகளாக 16 அணிகளும், பிரிவுக்கு நான்கு அணிகள் வீதம் விளையாடு கின்றன. குரூப் சுற்றில் முதல் இரண்டு இடம் பிடித்த அணிகள் இரண்டாவது சுற்றில் விளையாடும். அதில் முதல் இரண்டு இடங்கள் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும். தொடர்ந்து கிளாசிபிகேஷன் சுற்று மற்றும் நாக்அவுட் சுற்று ஆட்டங்கள் நடைபெறும். ஆகஸ்ட் 30ம் தேதி இறுதிப் போட்டி நடைபெறுகிறது. இந்திய அணி விவரம் கோல் கீப்பர்கள்: மோஹித், சுராஜ் தடுப்பாட்ட வீரர்கள்: ஜர்மன்பிரீத் சிங், ஹர்மன்பிரீத் சிங் (கேப்டன்), அமித் ரோஹிதாஸ், ஜுக்ராஜ் சிங், சஞ்சய், சுமித், யஷ்தீப். மிட்ஃபீல்டர்கள்: ரஜிந்தர் சிங், ஆதித்ய அர்ஜுன், ஹார்திக் சிங், மன்பிரீத் சிங், நீலகண்ட சர்மா, விவேக் சாகர் பிரசாத். முன்கள வீரர்கள்: தில்பிரீத் சிங், ஷிலானந்த், ஷுக்ஜீத் சிங், மந்தீப் சிங், அபிஷேக். இந்திய அணி அனுபவம் மற்றும் இளம் வீரர்கள் கொண்ட கலவையாக உள்ளது. அணியில் உள்ள வீரர்கள் ஒவ்வொருவரும் தங்களது செயல்திறன் மூலம் தங்களுக்கான இடத்தை பிடித்துள்ளனர். இந்த தொடரை ஒவ்வொரு ஆட்டமாக அணுக விரும்புகிறோம். கடைசியாக கடந்த 1975ல் இந்திய அணி உலகக் கோப்பை வென்றது. இந்தக் குழு வரலாறு படைக்கும் வாய்ப்பை பெற்றுள்ளது. இந்த தொடரை மிகுந்த ஆர்வத்துடன் நாங்கள் எதிர்பார்த்து உள்ளோம்” என்று இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் கிரெய்க் ஃபுல்டன் தெரிவித்துள்ளார்.

## ரூ.15 கோடி போதைப் பொருள் பெங்களூருவில் 17பேர் கைது




**பெங்களூரு.ஜூலை.22**

பெங்களூரு மாநகர எல்லைக்குட்பட்ட பானஸ்வாடி காவல் நிலையத்துக்குட்பட்ட கம்மனஹள்ளியில் கார் நிறுத்தும் பகுதியில் போதைப் பொருள் விற்பனை செய்யப்படுவதாக ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து மத்திய குற்றப்பிரிவு போலீஸார் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருடன் இணைந்து விசாரணை மேற்கொண்டனர். அப்போது 3 பேர் போதைப் பொருளை காரில் பதுக்கி விற்பனை செய்வது தெரியவந்தது. அவர்களிடம் நடத்திய விசாரணையின் அடிப்படையில் 3 இடங்களில் மொத்தம் 13.13 கிராம் எம்டிஎம்ஏ போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டது. இது தவிர இந்திரா நகர், அசோக் நகர், கோரமங்களா உள்ளிட்ட இடங்களில் நடத்திய சோதனையில் 181 கிராம் கோகைன், 59.32 கிலோ கஞ்சா, 7 கிலோ ஓப்பியம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன. இவற்றின் மதிப்பு ரூ.15 கோடி. இது தொடர்பாக 8 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இந்த வழக்குகளில் வெளிநாட்டை சேர்ந்த ஒருவர் உட்பட 17 பேர் கைது செய்யப்பட்டனர். அதில் 6 பேர் வெளி மாநிலங்களை சேர்ந்தவர்கள், 10 பேர் பெங்களூருவை சேர்ந்தவர்கள் என்பது தெரிய வந்துள்ளது.

## ம.பி.யில் குப்பையில் வீசப்பட்ட 2கிலோ வெள்ளிக் குவளை மீட்பு



**இந்தூர்.ஜூலை.22**

மத்திய பிரதேச மாநிலம் இந்தூரின் ராஜேந்திரா நகர் பகுதியில் கடந்த சனிக்கிழமை மூதாட்டி ஒருவர் வீட்டில் சேகரமான தினசரி குப்பையை அவ்வழியாக வந்த மாநகராட்சிக் குப்பை சேகரிப்பு வாகனத்தில் போட்டார். அப்போது தவறுதலாக ஆன்மீக சடங்குகளுக்கு பயன்படுத்தப்படும் 2 கிலோ வெள்ளிக் குவளை இருந்த பையையும் அதில் போட்டுவிட்டார். இதை குடும்பத்தினர் உணர்வதற்குள் நகரின் குப்பை மாற்றும் நிலையத்தில் குப்பைகள் கொட்டப்பட்டு, பிறகு அங்கிருந்து திடக்கழிவு மேலாண்மை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு விட்டன. மூதாட்டியின் குடும்பத்தினர் உதவி கேட்டு மாநகராட்சி அதிகாரிகளை அணுகினர். அவர்கள் வெள்ளிக் குவளையை மீட்பதற்கான முயற்சிகளை தொடங்கினர். இதற்குள் குப்பைகளை காகிதம், பிளாஸ்டிக், உலோகம் என தரம் பிரிக்கும் அந்த மையத்தில் அடையாளம் தெரியாத அந்த குவளையை உலோக கழிவுக் குவியலுக்குள் ஊழியர்கள் சேர்த்துவிட்டனர். இதையடுத்து டன் கணக்கிலான அந்த உலோக கழிவுக் குவியலை தூய்மைப் பணியாளர்கள் சுமார் 48 மணி நேரம் ஆராய்ந்தனர். இறுதியாக மங்கலாக இருந்த அந்த குவளையை அடையாளம் கண்டு மீட்டனர். இதுகுறித்து சுகாதார ஆய்வாளர் விஜய் யாதவ் கூறுகையில், “இந்தூர் நகரம் முழுவதிலுமிருந்து தினமும் நூற்றுக் கணக்கான டன் கழிவுகள் இந்த மையத்திற்கு கொண்டு வரப் படுவதால், முதலில் கண்டுபிடிப்பது சாத்தியமற்றதாகவே தோன்றியது. தகவல் தெரிவிப்பதில் சில மணிநேரம் தாமதம் ஏற்பட்டிருந்தாலும் கூட, ரூ.5 லட்சம் மதிப்புள்ள அந்த குவளை நிரந்தரமாக தொலைந்து போயிருக்கும்” என்றார். இதற்கிடையில் அந்த மூதாட்டி ஆன்மீக யாத்திரைக்காக வெளியூர் சென்றிருப்பதால் அவர் திரும்பும் வரை வெள்ளிக் குவளையை பாதுகாப்பாக வைத்திருக்க உள்ளூர் நகராட்சி கவுன்சிலர் பிரசாந்த் பட்வேயிடம் அதிகாரிகள் ஒப்படைத்துள்ளனர்

அமெரிக்கா ஈரான் மோதல் தீவிரம்

## கச்சா எண்ணெய் விலை கடுமையாக அதிகரிப்பு

**டெஹ்ரான்.ஜூலை.22**

அமெரிக்கா ஈரான் இடையே மோதல் தீவிரம் அடைந்துள்ளதால், கச்சா எண்ணெய் விலை மீண்டும் கடுமையாக உயர்ந்துள்ளது. பிரென்ட் கச்சா எண்ணெய் ஒரு பேரல் விலை 90 டாலருக்கு மேலாக உயர்ந்தது. இது, போரால் உருவான உலகளாவிய எரிசக்தி நெருக்கடியை மேலும் அதிகரித்துள்ளது. இடைக்கால போர் நிறுத்த உடன்பாட்டை மீறி ஹார்முஸ் ஜலசந்தியில் எண்ணெய்க் கப்பல்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தி யதால், அந்நாட்டின் மீது அமெரிக்க ராணுவம் கடந்த ஒரு வாரமாக கடும் தாக்குதலை மேற் கொண்டு வருகிறது. ஈரானின் உள் கட்டமைப்புகளை குறி வைத்து இந்த தாக்குதல் நடத்தப் படுகிறது. அமெரிக்காவின் சமீபத்திய தாக்குதல்களில் 50 பேர் கொல்லப்பட்டதாகவும், 517 பேர் காயம் அடைந்ததாகவும் ஈரான் அதிகாரிகள் நேற்று தெரிவித்தனர்.

Printed by Dr.P.PANDIYARAJAN Printed at RAJA PRINTERS at No.5, Namashivayam Nagar, 2nd street, Duraisamy nagar, Madurai 625 016, Published by Dr.P.PANDIYARAJAN No.5, Namashivayam Nagar, 2nd street, Duraisamy nagar, Madurai 625 016 Editor : Dr.P.PANDIYARAJAN. TN/WPP/SR/2008-2020